## (ஏ) 1961ம் ஆண்டின் கைத்தொழில் அபிவிருத்தியின் போக்கு

1961ம் ஆண்டில் இலங்கையின் கைத்தொழிற் துறையில் உண்டான வளர்ச்சியின் விகிதத்தையும் அமைப்பையும் திட்டவட்டமாக அளவிட்டுக் கூறுவதற்குத் தேவையான தீர்க்கமான புள்ளி விபரங்கள் கிடையா. எனினும் இக்காலத்திற்குரிய கைத்தொழில் அபிவிருத்தியில் சில குறிப்பிடத்தக்க போக்குகளைக் காணக்கூடியதாக உள்ளது. அரசாங்கத் துறையிலும், தனிப்பட்டோர் துறையிலும் முந்தைய காலங்களிற் செய்யப்பட்ட முதலீடுகள் மெதுவாகப் பலன் அளிக்கத் தொடங்கி கைத்தொழில் அடிப்படையைப் படிப்படையாக விரிவாக்கி பரவச்செய்வதற்கு வழி கோலியன என்பதை இப்போக்குகள் காட்டுகின்றன. மேலும், கைத்தொழில் அபிவிருத்திக்கு வேண்டிய ஆதார அமைப்புக்கள் பலமாக்கப்பட்டதுடன், தொழில் நிலையங்களைத் தொடங்குவதற்கு தனிப்பட்டோர் துறைக்குப் புதியதோர் அக்கறையும் உருவாகியுள்ளது என்பதையும் இப்போக்குகள் காட்டுகின்றன.

அரசாங்கத்துறை

அரசாங்கத்துறையின் தற்போதுள்ள கூட்டுத்தாபனங்களின் இயக்கங்களை அரசாங்கம் இவ்வருடம் பரிசீலனை செய்தது. இப்பரிசீலனையைத் தொடர்ந்து கூட்டுத்தாபனங்களின் முயற்சித் திறமைகளைச் சீர்ப்படுத்துவதற்கான பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. முதலாவதாக, பரிபாலன வல்லுணரின் தட்டுப்பாட்டைத் தீர்ப்பதற்காகவும், நிர்வாகச் செலவுகளைச் சிக்கனப்படுத்துவதற்காகவும் பல கூட்டுத்தாபனங்கள் இணைக்கப்பட்டு, அவற்றின் பரிபாலனம் ஒரு நிர்வாகத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. உதாரணமாக, பரந்தன் இரசாயணப் பொருட்கள் கூட்டுத்தாபனமும், உப்புக் கூட்டுத்தாபனமும் இணைக்கப்பட்டன. இரண்டாவதாக, தற்பொழுதுள்ள நிர்வாக அமைப்பைப் பலப்படுத்துவதற்காக சிலசமயங்களில், உதாரணமாக கிழக்குப்பகுதிக் காகித ஆலைக் கூட்டுத்தாபனத்தில், கூடுதலான அந்நிய நிபுணர்களும், உள்ளூர் நிபுணர்களும் அமர்த்தப்பட்டனர். மூன்றாவதாக, உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கமாகக் கிட்டத்தட்ட எல்லாக் கூட்டுத்தாபனங்களும் திருத்தி அமைக்கப்பட்டு, சில தாபனங்களைப் பொறுத்தவரையில் அவற்றை விரிவாக்குவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டோ அல்லது கையாளப்பட்டோ இருந்தன. நாலாவதாக, இக்கூட்டுத்தாபனங்களுக்குரிய உற்பத்திக் குறிகோள்களையும் ஏனைய குறிகோள்களையும் அடைவதற்கான முறையில் அவை செயலாற்றுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்கமே இக்கூட்டுத்தாபனங்களின் இயக்கங்களை மிக நெருங்கிய முறையிற் பரிசீலனை செய்து வருகின்றது. இந்நடவடிக்கைகளின் பயனுல் பழமையான கூட்டுத்தாபனங்கள் பல தமது உற்பத்திகளை அதிகரித்து இலாபங்களைக் கொடுக்கத் தொடங்கியுள்ளன.

அரசாங்கத்துறையின் கைத்தொழில் உற்பத்தி சம்பந்தமான புள்ளிவிபரங்களை அட்டவணை II—53 காட்டுகின்றது.

சிமெந்து உற்பத்தியை அதிகரிப்பதற்கான திட்டம் ஒன்று கையாளப்பட்டமை ஒரு குறிப்பிடும்படியான விடயமாகும். இத்திட்டம் பின்வரும் மூன்று கட்டங்களைக் கொண்டது:- (1) காங்கேசன்துறையில் தற்பொழுதுள்ள சிமெந்துத் தொழிற்சாலையில் இன்னொரு சூளையை அமைத்தல்; (2) காலியில் சிமெந்துக்கட்டி அரைக்கும் ஆலை ஒன்றை நிறுவுதல்; (3) புத்தளத்திற்கு அண்மையாக மூலப் பொருட்கள் கிடைக்கும் வசதியுள்ள ஒரு நிலையத்தில் வேறொரு சிமெந்துத் தொழிற்சாலையை நிறுவுதல். முதற்கூறப்பட்ட இரு கட்டங்களுக்கும் ஏறக்குறைய 400 இலட்சம் ரூபாய்கள் செலவாகும். இத்தொகை மேற்கு ஜெர்மனிய அரசாங்கத்தின் கொடுகடன் மூலமாகப் பெறப்படும். தற்பொழுது உள்ள சிமெந்து உற்பத்தி, வருடம் ஒன்றுக்குச் சராசரி 80,000 தொன்களாகும். இது தற்போதுள்ள உள்நாட்டுத் தேவைகளில் மூன்றில் ஒரு பங்காக உள்ளது. தற்பொழுதுள்ள சிமெந்துத் தொழிற்சாலையை விரிவாக்குவதற்கான திட்டம் நிறைவேற்றப்பட்டபின், சிமெந்து உற்பத்தி 250,000 தொன்களுக்கு அதிகரிக்கும். இரண்டாவது தொழிற்சாலை நிறுவப்பட்டபின் மேலும் 200,000 தொன்கள் உற்பத்தி செய்யப்படும். இரண்டாவது தொழிற்சாலை நிறுவுவதற்கு 500 இலட்சம் ரூபாய்கள் செலவாகும். இத்தொகையை அந்நிய துறைகளிலிருந்து கொடுகடனுகப் பெறுவதற்கு உள்ள வழிவகைகள்

அட்டவணை II–53

அரசாங்கத்துறையில் உள்ள கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள்

| கூட்டுத்தாபனத்தின் பெயர் | நிறுவப் பட்ட காலம் | மூலதனம் பத்து இலட்சம் ரூபாய் களில் | உற்பத்திப் பொருள் | உற்பத்தி: அளவைக்கூறு | 1956 | 1957 | 1958 | 1959 | 1960 | 1961 | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. கிழக்குப்பகுதிக் காகிதக் கூட்டுத்தாபனம் .. | 1955 | 22·0 | காகிதம் .. | தொன் | 736 | 1,379 | 1,235 | 4,187 | 4,563 | 2,545 (அ) | |
| 2. இலங்கை எண்ணெய்களும் கொழுப்புகளும்.. | 1955 | 19·8 | தேங்காயெண்ணெய் .. | தொன் | 1,234 | 3,426 | 6,678 | 7,477 | 8,112 | 10,459 | |
| | | | கால்நடைப் பண்ணை பறவை உணவு .. | தொன் | 111 | 1,800 | 4,700 | 3,422 | 11,723 | 23,607 | |
| 3. இலங்கைப் பீங்கான் .. | 1955 | 3·0 | பீங்கான் பொருட்கள் .. | தொன் | 201 | 338 | 368 | 425 | 466 | 480 | |
| 4. இலங்கைஒட்டுப்பலகை | 1956 | 2·8 | மூவொட்டுப் பலகை .. | சதுரஅடி | 5,578,621(ஆ) | 7,591,767 | 6,877,675 | 8,309,077 | 9,288,514 | 11,271,523 | |
| 5. கைத்தொழில் திணைக்களத் தோற்பொருட்கள் .. .. | 1956 | 1·7 | பாதரட்சைகளும் தோற்பொருட்களும் | நியமச் செலவின்படி உற்பத்தியின் பெறுமானம் | 637,692(இ) | 1,012,212 | 1,278,256 | 367,488 (ஈ) | 1,358,454(உ) | 1,523,035(ஊ) | |
| 6. பரந்தன் இரசாயனப் பொருட்கள் .. | 1956 | 15·7 | எரிசோடா .. | தொன் | — | — | — | — | 78·4 | 666 | |
| 7. இலங்கை சிமெந்து .. | 1956 | 26·8 | சிமெந்து .. | தொன் | 83,371 | 48,195 | 79,079 | 93,463 | 83,623 | 80,471 | |
| 8. கனிப்பொருள் மணல் | 1957 | 8·0 | இல்மனைற்று .. | தொன் | — | — | — | — | 6,264 | 3,832 | |
| 9. கந்தளாய் சீனி .. | 1957 | 28·0 | சீனி .. | தொன் | — | — | — | — | 215 | 306 | |
| | | | பாகுகள் .. | தொன் | — | — | — | — | 319 | 155 | |
| 10. தேசிய உப்பு .. | 1957 | 14·0 | உப்பு .. | தொன் | — | — | — | 4,164 | 11,233 | உற்பத்தியில்லை | |
| 11. தேசியப் புடவை .. | 1958 | 41·1 | நூல் .. | இறுத்தல் | — | — | — | — | — | 423,324 | |
| 12. தேசிய சிறு கைத் தொழில்கள் .. | 1959 | 5·6 | | | | | | | | | செங்கல், ஓடுகள், தயாரிப்பதற்கு தொழிற்சாலைகள் நிறுவப்படுகிறது. |
| 13. இறுகிய நார்ப்பலகை.. | 1959 | 3·0 | | | | | | | | | கட்டட வேலைகள் நடைபெறுகின்றது. |
| 14. கைத்தொழில் நிலையங்கள் .. | 1960 | 2·5 | | | | | | | | | ,, |
| 15. இரும்பு எஃகு .. | 1961 | 80·0 | ஆரம்ப முதலீடு | | | | | | | | ,, |
| 16. ரயர்கள், டியுபுகள் .. | 1961 | 51·7 | ஆரம்ப முதலீடு | | | | | | | | ,, |

(அ) சித்திரை முதல் மார்கழி வரை 9 மாதங்களுக்கு
(ஆ) தை முதல் புரட்டாதி வரை 9 மாதங்களுக்கு
(இ) சித்திரை முதல் மார்கழி வரை 9 மாதங்களுக்கு
(ஈ) தை முதல் பங்குனி வரை 3 மாதங்களுக்கு
(உ) சித்திரை 1959 முதல் பங்குனி 1960 வரை 12 மாதங்களுக்கு
(ஊ) சித்திரை 1960 முதல் பங்குனி 1961 வரை 12 மாதங்களுக்கு

ஆராயப்படுகின்றன. பீங்கான் கூட்டுத்தாபனம், ஆரம்பத்திற் காணப்பட்ட கஷ்டங்களைத் தீர்த்ததோடு, தன் உற்பத்தியிலும் அதிகரிப்பைக் காட்டியது. 1960ம் ஆண்டிற்கும் 1961ம் ஆண்டிற்கும் இடையில் அதன் உற்பத்தி 466 தொன்களிலிருந்து 480 தொன்களுக்கு அதிகரித்தது. இக்கூட்டுத்தாபனத்தின் அபிவிருத்தித் திட்டம் பின்வரும் அம்சங்களைக் கொண்டது:– (1) ரூபா 20 இலட்சம் செலவில் இன்னொரு ஆலையை நிறுவுதல்; (2) ரூபா 90 இலட்சம் செலவில் இன்னொரு ''கெயொலின்'' சுத்தம் செய்யும் ஆலை ஒன்றை நிறுவுதல். இத்திட்டம் நிறைவேற்றப்பட்டபின் பல வகைப்பட்ட பீங்கான் பொருட்களில் இலங்கை தன் தேவைக்குப் போதுமான அளவைப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தோற் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் 1960–61ம் ஆண்டிற்கான உற்பத்தி, 1959–60ம் ஆண்டின் ஒப்பியல்பான காலத்திற்குரிய உற்பத்தியிலும் பார்க்க அதிகரித்துள்ளது. இந்த உற்பத்தியின் பெறுமானம் 1959 சித்திரை முதல் 1960 பங்குனி வரையுள்ள காலத்தில் 13,58,454 ரூபாய்களாகவும், 1960 சித்திரை முதல் 1961 பங்குனி வரை 15,23,035 ரூபாய்களாகவும் விளங்கின. இக்கூட்டுத்தாபனத்தின் வளர்ச்சிக்கான திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன. அவ்வளர்ச்சிக்குத் தேவையான இயந்திரங்களையும் உபகரணங்களையும் இக்கூட்டுத்தாபனம் செக்கோசலாக்கியாவில் இருந்து இறக்குமதி செய்யும்.

ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனத்தின் மூவொட்டுப்பலகை உற்பத்தி 92,28,514 சதுர அடிகளிலிருந்து 112,21,523 சதுர அடிகளுக்கு அதிகரித்துள்ளது. முந்தைய ஆண்டுகளில் நட்டமடைந்து பின்னர் அண்மையில் ஓரளவு வெற்றிகரமாக விளங்கிய இன்னொரு கூட்டுத்தாபனம், கிழக்குப் பகுதிக் காகிதக் கூட்டுத்தாபனமாகும். இக்கூட்டுத்தாபனத்தின் காகித உற்பத்தி, ஆதியில் எதிர்பார்க்கப்பட்ட 3750 தொன்களுக்கு எதிராக தற்பொழுது 4000 தொன்களுக்கும் மேலானதாய் உள்ளது. இக்கூட்டுத்தாபனத்திற்கான 70 இலட்சம் ரூபாய்கள்கொண்ட ஒரு விஸ்தரிப்புத் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பரந்தன் இரசாயணக் கூட்டுத்தாபனமும், இலங்கை கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனமும் 1960ம் ஆண்டின் பிற்பகுதியில் தத்தமது தயாரிப்புத் தொழில்களைத் தொடங்கின. 1961ம் ஆண்டில் அவை, முறையே, 666 தொன்கள்கொண்ட எரிசோடாவையும், 3832 தொன்கள்கொண்ட இல்மனைற்றையும் உற்பத்தி செய்தன.

இவ்வருடத்தில் அரசாங்கத்தின் புதிய கைத்தொழில் நிலையங்கள் சில உற்பத்தித் தொழிலை ஆரம்பித்தன; மற்றும் சில ஆக்கநிலையில் இருந்தன; மேலும் சிலவற்றிற்கான திட்டங்கள் முற்றுக்கப்பட்டன. உற்பத்தித் தொழிலை ஆரம்பித்த கூட்டுத்தாபனங்களுள் முக்கியமானவை தேசிய புடவைக் கூட்டுத்தாபனமும், கந்தளாய் சீனி உற்பத்திக் கூட்டுத்தாபனமும் ஆகும். இவ்விரு ஆலைகளும் 1961ம் ஆண்டு தொழிற்படத் தொடங்கின. தேசிய புடவைக் கூட்டுத்தாபனம் 410 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்ட இரண்டு ஆலைகளை உடையதாக இருக்கும். இதில் ஒரு ஆலையின்பேரில் இருந்த செலவு உள்நாட்டு மூலாதாரங்களிலிருந்தும் மற்ற ஆலையின்பேரில் உண்டான செலவு சீன மக்கள் குடியரசிலிருந்து கிடைத்த அந்நிய உதவிமூலமும் நிதியீட்டப்பட்டன. இதில், முதலாவது ஆலை ஏற்கனவே தொழிற்பட ஆரம்பித்து 4,23,324 இறாத்தல்கள்கொண்ட நூலை உற்பத்தி செய்தது. இந்நூல், கைத்தறி நெசவுத் தொழிலிலும், பின்னல் கைத்தொழில்களிலும் உபயோகிக்கப்படும். இவ்வாலையின் நெசவுத் தொழில்கள் இறக்குமதி செய்யப்பட்ட நூலைக் கொண்டு, பின்னர் ஆரம்பிக்கப்படும். இரண்டாவது ஆலையின் தொழிற்பாடுகள் 1963ம் ஆண்டின் இறுதிப்பகுதியில் ஆரம்பமாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

கந்தளாய் சீனி உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் கட்டட வேலைகள் 1960ம் ஆண்டு முடிவுற்றதெனினும், அதன் தேவைகளுக்கான கரும்பு தட்டுப்பாடாக இருந்தமை ஒரு பிரச்சனையாக விளங்கியது. 1961ம் ஆண்டு இறுதிவரை 520 தொன்கள்கொண்ட சீனி உற்பத்தி செய்யப்பட்டது. இத்தொழிற்சாலையோடு இசைந்த வடிசாலை ஒன்று தற்பொழுது நிறுவப்பட்டுவருகிறது. அது 1962ம் ஆண்டளவில் உற்பத்தித் தொழிலில் ஈடுபடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சீனி உற்பத்தியோடு சம்பந்தமுடைய விவசாயப்பகுதியிலுள்ள இடர்பாடுகளைத் தவிர்ப்பதற்காக இதுகாறும் வெவ்வேறு அமைச்சுக்களின்கீழ் இருந்த கரும்பு உற்பத்தியையும், சீனி

உற்பத்தியையும் இணைத்து ஒரு அமைச்சின்கீழ் கொண்டுவரப்பட்டது. கல்லோயா அபிவிருத்திச் சபையின்கீழ் அம்பாரையிலுள்ள சீனித் தொழிற்சாலை 1960ம் ஆண்டு உற்பத்திசெய்யத் தொடங்கியது. 1961ம் ஆண்டு இறுதிவரை, அது 2472 தொன்கள் கொண்ட சீனியை உற்பத்தி செய்தது.

1962ம் ஆண்டு உற்பத்தித் தொழில் தொடங்குவதற்கு உத்தேசித்துள்ள இரு கூட்டுத்தாபனங்களுக்கான கட்டட வேலைகளும், ஏனைய முயற்சிகளும் தற்பொழுது நடந்து வருகின்றன. இக்கூட்டுத்தாபனங்களாவன:- கைத்தொழில் நிலைய கூட்டுத்தாபனம், தேசிய சிறு கைத்தொழில்கள் கூட்டுத்தாபனம்.

மூன்றும் பிரிவாக உள்ள தொகுதியில் இரண்டு பெரிய திட்டங்கள் உள்ளன. அவையாவன: இலங்கை எஃகுக் கூட்டுத்தாபனம், ரயர், ரியூப் கூட்டுத்தாபனமாகும். இந்த இரண்டு திட்டங்களுக்கும் தேவையான நிதி ருசியாவினால் உதவப்பட்ட கொடுகடனிலிருந்து பெறப்படும். எஃகுக் கூட்டுத்தாபனத்தின் பேரிலுள்ள ஆதி முதலீடு 800 இலட்சம் ரூபாய்களாகவும், மற்றைய கூட்டுத்தாபனத்தின் பேரில் அது 517 இலட்சம் ரூபாய்களாகவும் இருக்கும். எஃகுக் கூட்டுத்தாபனத்திற்கான திட்டத்தின் முதற்படியாக எஃகு உருட்டும் யந்திரத்தை நிறுவுவதையும், கம்பித் துண்டுகளை உற்பத்தி செய்வதையும் இத்தாபனம் நடத்தி வருகிறது. இறக்குமதியான மூலப் பொருட்களைக்கொண்டே ஆரம்பக் கட்டத்தில் உற்பத்தித் தொழில் நடைபெறும் என்ற அடிப்படையில் இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. ரயர்களுக்கும், ரியூப்களுக்கும் ஆன திட்டம், 1964ம் ஆண்டு நிறைவேறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அரசாங்கத்துறையில், நில எரிஎண்ணெய் சுத்தம் செய்யும் ஆலை ஒன்றையும் உரம் உற்பத்திசெய்யும் ஆலை ஒன்றையும் நிறுவுவதற்காக அந்நிய அரசாங்கங்களுடனும் தனிப்பட்ட முதலீடுவோர்களுடனும் அரசாங்கம் தற்பொழுது பேச்சுவார்த்தை நடத்துகின்றது.

தனிப்பட்டோர்துறை சம்பந்தமான கொள்கை: தனிப்பட்டோர்துறை சம்பந்தமான கொள்கையை அரசாங்கம் திருப்பி வெளியிட்டதோடு,* தனிப்பட்டோர் துறையிலுள்ள கைத்தொழில் முதலாளிகளுக்கு உதவி அளிப்பதற்கும், தொழிலாற்ற அனுமதி கொடுப்பதற்குமாக உள்ள நிர்வாக அமைப்புக்களையும் சீர்திருத்திற்று. தனிப்பட்டோர்துறையை கைத்தொழில் அபிவிருத்தியில் ஈடுபடச் செய்வதற்காக தற்பொழுது பின்வரும் முறைகளில் ஊக்கம் அளிக்கப்படுகின்றது. (அ) இலாபங்களில் ஒரு பகுதியை அல்லது முழுவதையும் வருமானவரியிலிருந்து தவிர்த்தல்; (ஆ) முதலீட்டில் செலவிடப்பட்ட தொகையின் ஒரு குறிக்கப்பட்ட விகிதாச்சாரத்தை அபிவிருத்திச் சலுகைகளின்மூலம் வருமானவரியிலிருந்து தவிர்த்தல்; (இ) மூலதனத் தேய்வுக்கான கழிவுகள்; (ஈ) உபகரணங்களின் மேலும், மூலப் பொருட்களின் மேலும் சுங்கத்தீர்வைச் சலுகை விகிதங்கள்; (உ) நுகர்ச்சிப் பொருட்களைத் தயாரிக்கும் சிறு கைத்தொழில் நிலையங்களைத் தாபிப்பதற்குத் தனிப்பட்ட மூலதனங்களோடு அரசாங்கம் மூலதன ஈட்டத்தில் பங்குபற்றுதல்; (ஊ) கைத்தொழில் முயற்சிகளுக்கு கடனுதவி அளித்தல்; (எ) இலங்கை விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சிக் கழகத்தின் மூலமாகவும், சிறு கைத்தொழில், குடிசைக் கைத்தொழில் திணைக்களத்தின் மூலமாகவும், தொழில் நுட்ப உதவியளித்தல்; (ஏ) இறக்குமதிக் கட்டுப்பாடு, சுங்கத்தீர்வை மாற்றங்கள், கைத்தொழில் உற்பத்திப் பொருட்கள் (பிரமாணங்கள்) அதிகாரச் சட்டம் ஆகியவற்றின் மூலமாக உள்நாட்டு உற்பத்திப் பொருட்களுக்குப் பாதுகாப்பு அளித்தல்; (ஐ) அரசாங்கக் கொள்வனவுகள். அத்துடன், கைத்தொழில் வளர்ச்சியை மேலும் தூண்டத்தக்க மின்சார சக்தி, போக்குவரத்து, தொழில் நுட்பக் கல்விபோன்ற மூலாதாரவசதிகளை அபிவிருத்தி செய்வதற்காகவும், அரசாங்கம் தனது முதலீடுகளை அதிகரித்துள்ளது.

---

* கைத்தொழில் அமைச்சின் அபிவிருத்திப் பகுதியால் வழங்கப்பட்ட "முதலீட்டக்காரர்களுக்கான வழிகாட்டி" சஞ்சிகை ஒன்று, தொடர் 1.

கைத்தொழில் அபிவிருத்திக்குக் கிடைக்கத்தக்க உள்ளூர் வளங்களுக்குப் பக்க பலமாகத் தனிப்பட்ட அந்நிய மூலதனங்களையும், தொழில்நுட்ப அறிவையும் பெற வேண்டிய முக்கியத்துவத்தை அரசாங்கம் உணர்ந்து, தனிப்பட்ட அந்நிய மூலதனம் சம்பந்தமான அரசாங்கக் கொள்கை நிதிஅமைச்சின் 1960–61ம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டப் பேச்சில் வெளியிடப்பட்டது. அந்நிய மூலதனம் எவ்விதமான நிபந்தனைகளின்கீழ் இலங்கைக்குள் வர அனுமதிக்கப்படும் என்பது அதில் வெளி யிடப்பட்டுள்ளது. உள்நாட்டு மூலதனங்களுக்கு அளிக்கப்படும் வரிச் சலுகைகள், தீர்வைச் சலுகைகள் முதலிய சகல வசதிகளையும் அந்நிய மூலதனத்திற்கும் அளிப்ப தற்கு அரசாங்கம் சம்மதித்துள்ளது. அத்துடன் பின்வரும் உறுதிமொழிகளும் கொடுக்கப்பட்டது:–

1. பங்கு லாபங்களையும், கடைசியில் இருப்புச் சொத்துக்களையும் திருப்பி எடுத்துச் செல்ல எவ்வித கட்டுப்பாடுமின்றி அனுமதிக்கப்படும்.

2. தேவையான இயக்குநர், தொழில் நுட்பப் பயிற்சி பெற்றோர் ஆகிய தனி ஆட்களைக் கொண்டுவருதல் எவ்வித கட்டுப்பாடுமின்றி அனுமதிக்கப்படும்.

3. அவ்விதமான தனி ஆட்கள் உழைத்த வருவாய்களில் ஒரு பகுதியை வெளி யூர்களுக்கு அனுப்ப அனுமதிக்கப்படும்.

4. அரசாங்கங்களுக்கிடையே முடிவாக்கப்படும் ஒப்பந்தங்களின் மூலம் இரட்டை வரி விதிப்புக்கள் நீக்கப்படவேண்டியதை அரசாங்கம் கொள் கையளவில் ஏற்றுச் செயலாற்றச் சம்மதித்துள்ளது.

நிர்வாக அமைப்பை நிறுவுதல்: தனிப்பட்டோர் துறையிலும் அரசாங்கத் துறை யிலும் அரசாங்கத்தின் கொள்கைகளைச் செயற்படுத்துவதற்காக, கைத்தொழில் அமைச்சின்கீழ் புதிதாக ஓர் அபிவிருத்திப் பகுதியை அரசாங்கம் நிறுவியுள்ளது. அத்துடன் தேசிய பொதுக் கைத்தொழிற் திட்டங்களில் ஒரு முக்கியமான பகுதியா கத் தற்பொழுது சிறு கைத்தொழில்கள், குடிசைக் கைத்தொழில்கள் ஆகியவற்றை விருத்தி செய்வதற்கான நிர்வாக அமைப்பைப் பலப்படுத்துவதற்கு அரசாங்கம் மேலும் மூன்று நடவடிக்கைகளுக்கு அனுமதி அளித்தது. சிறு கைத்தொழில்கள், குடிசைக் கைத்தொழில்கள் அபிவிருத்திச் சபை ஒன்றும், சிறு கைத்தொழிற் சேவைக் கழகம் ஒன்றும், குடிசைக் கைத்தொழில்களுக்குக் கொடுகடன் வசதி வழங்கி, அவற்றை மேற்பார்வை செய்வதற்குமான ஒரு திட்டமும் நிறுவப்பட இருக்கின்றன.

மேலே கூறப்பட்ட தூண்டுதல்களையும் நிர்வாக அமைப்பில் கொண்டுவரப் பட்ட மாற்றங்களையும் தவிர 1960ம் ஆண்டு சென்மதி நிலுவை சீர்கேடடைந் ததின் விளைவாகப் புகுத்தப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள் 1961ம் ஆண் டில் உள்நாட்டுக் கைத்தொழிலின் வளர்ச்சிக்கு உகந்தவாறு சூழ்நிலையை மாற் றியமைப்பதற்குக் குறிப்பிடத்தக்க வகையில் உதவிபுரிந்தன. இதுகாறும் கட்டில் லாப் பொது உத்தரவுச் சீட்டுக்களின் கீழ் இறக்குமதி செய்யப்படக்கூடியனவாய் இருந்த பலதரப்பட்ட பொருட்கள், 1960ம் ஆண்டில் தனித்தனி உத்தரவுச் சீட் டுக்களின் கீழும் அளவுக் கட்டுப்பாடுகளின் கீழும் கொண்டு வரப்பட்டன. இப் பொருட்களிற் பலவற்றின் இறக்குமதி 1961ம் ஆண்டில் தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டு அல்லது பாரதூரமாக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் பயனாகவும், உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கு உற்சாகம் ஊட்டும் அரசாங்கக் கொள்கைகளின் பயனாகவும், இறக்குமதிப் பொருட்களுக் குப் பதிலான பொருட்களை உற்பத்தி செய்வதற்கான உள்நாட்டுக் கைத்தொ ழில் நிலையங்களை நிறுவுவதற்கு ஓர் அதிகரித்த அக்கறை ஏற்பட்டுள்ளது.

தனிப்பட்டோர் துறையின் உள்நாட்டு முதலீடு: 1960ம் ஆண்டு வைகாசிமாதத்திற்கும் 1961ம் ஆண்டு கார்த்திகை மாதத்திற்கும் இடையில் பலவகையான கைத்தொழில் முயற்சிகள்* கைத்தொழில் அமைச்சின் அபிவிருத்திப் பகுதியால் அனுமதிக்கப்பட்டன. இவற்றைவிட வேறு சில திட்டங்கள் கொள்கையளவில் மட்டும் அனுமதிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக மோட்டோர்க் கார்களை இணைத்தல்; அத்துடன் பல்வேறு திட்டங்கள் பரிசீலனை செய்யப்படுகின்றன. மேலே கூறப்பட்ட முயற்சிகளின் மொத்த ஒப்புரவு முதலீடு 570 இலட்சம் ரூபாய்களாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், உண்மையில் இந்த முதலீடு செய்யப்பட்ட தொழில்களில் உபயோகிக்கப்படும் மொத்த மூலதனத்தின் அளவு மேற்கூறிய தொகையிலும் பார்க்க கூடியதாக இருக்கும். மேலே கூறிய பட்டியலில் மிகக் குறிப்பிடத்தக்க அம்சம் யாதெனில், அவற்றில் பெரும்பாலானவை நுகர்ச்சிப் பொருட்களைத் தயாரிப்பனவாக உள்ளன. அவ்வித தயாரிப்புகள் பெரும்பாலும் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களின் உள்ளூர்ப் பெறுமான அதிகரிப்பை உண்டாக்கி அந்நிய செலாவணிச் சேமிப்பையும் விளைவிக்கின்றன. இங்கே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட காலத்திற்கு முன்னரே உடைகள், விஸ்கோத்துக்கள் ஆகியவற்றிக்கு அனுமதி வழங்கப்பட்டமையினால், இவை போன்ற சில கைத்தொழில்கள் மேலே கூறப்பட்ட பட்டியலிற் சேர்க்கப்படவில்லை.

அன்னிய தனிப்பட்டோர் துறையின் முதலீடு: மேலே கூறப்பட்ட கைத்தொழில்கள் சிலவற்றில் அந்நிய தனிப்பட்டோர்துறையும் பங்கெடுத்துள்ளது. புதிய அந்நிய முதலீடுகள் சம்பந்தமான விண்ணப்பங்களை நுணுக்கமாகப் பரிசீலனை செய்வதற்காக அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட குழு, பின்வரும் கைத்தொழிற் தலங்களில் அந்நிய முதலீடுகளை அனுமதித்துள்ளது:- வானொலிப்பெட்டிகள், குளிரேற்றிகள், குளிரேற்றிப் பெட்டிகள், சைக்கில்கள், மண்ணெண்ணெய் அடுப்புகள் ஆகியவற்றை ஓரளவு தயாரித்தலும், இணைத்தலும்; எனமெல் பாத்திரங்கள், நாகம் பூசிய பொருட்கள், மோட்டோர் வாகனங்களின் மாற்று உறுப்புக்களும், துணைக்கருவிகளும், மோட்டோர் வாகன பற்றறிகள், பூச்சு மைவகைகளும், வாணிஸ் மைகளும், பற்பொடிகளும் அலங்கார சுத்திப் பொருட்களும் ஆகியவற்றை தயாரித்தல்; றெயொன் துணிகளை நெசவு செய்தலும் பதப்படுத்தலும். இக்கைத்தொழில்கள் சம்பந்தமாக இந்நாட்டிற்கு வர இருக்கும் மொத்த அந்நிய மூலதனம் கிட்டத்தட்ட 70 இலட்சம் ரூபாய்கள் ஆகும். இந்த மூலதனத்திற்கு பிரதான மூலங்களாக அமைந்த நாடுகள் பிரிட்டன், ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான் ஆகியனவாகும். வேறு சில முதலீடுகள் பரிசீலனை செய்யப்படு

* இக்கைத்தொழில் முயற்சிகளுள் அடங்கிய திட்டங்களாவன:- றெயொன் நெசவு செய்தலும், பதப்படுத்தலும்; க்ஷவர பிளேடுகள், குளிரேற்றிகள், சப்பாத்துப் பூச்சு, திண்ணைப் பூச்சு, சப்பாத்துமைகள், ஆகியவற்றைத் தயாரித்தலும்; மணிக்கூடுகள் கைக்கடிகாரங்கள், தையல் இயந்திரங்கள் ஆகியவற்றை இணைத்தலும் தயாரித்தலும்; ஊற்றுப் பேனைகள் கரிமிலக் கடுதாசிகள், பல்கழிப் பொத்தான்கள், பொறி மெழுகு, பிளாஸ்ரிக் பொருட்கள், வாணவேடிக்கைப் பொருட்கள், செயற்கை நகைகள், மின்சாரக் காற்றாடிகள், "பியர்" சித்திரவேலைப்பாடமைந்ததும் அமையாததுமான உலோகப் பொருட்களால் செய்த பெட்டிகள், தையல் நூல், ஊதுபத்திகள், கற்பூரம், அச்சுவேலைக்கான மை, பாதரட்சைகள், நாகம் பூசிய பொருட்கள், பொதிகள் கட்டும் நூல், நார் மட்டைகளினால் செய்த உடுப்புப்பெட்டிகள், துத்தநாகத்தினால் செய்த சாடிகள், மண்ணெண்ணெய் அடுப்புகள், மூக்குக்கண்ணாடிச் சட்டங்கள், "ஜாம்", கறிச்சரக்குப் பட்சணங்கள், பழச்சாறுகள், ஆகியவற்றை தயாரித்தலும்; படம் வெட்டி அச்சடித்தலும்; குடைகள், கண்ணார் சிமெந்து உற்பத்திப் பொருட்கள், ஊசிகளும் கிளிப்புகளும், திண்ணைப்போர்வைகளும், மேசைகளுக்கு மேலணிப் பொருட்களும், "சொக்களற்", திருகு ஆணிகள், கம்பி ஆணிகள், பலகை ஆணிகள், சுரை ஆணிகளும் ஆணிச் சுரைகளும், மருந்துப் பொருட்கள், சவுக்காரம், விளையாட்டுக்கான மூன்று சக்கர வண்டிகள், விநியோகத் தேவைக்கான மோட்டோர் இணைக்கப்பட்ட மூன்று சக்கர வண்டிகள், கண்ணாடித் தட்டுகளும் சாளரக் கண்ணாடிகளும், சுருட்டு ஆகியவற்றை தயாரித்தலும்; இரப்பர் டயர்களுக்குக் கோடுகள் அமைத்தலும்; மார்புக்கச்சை, உடைகள், நில ஓடுகள், பூச்சு மைகள், சேமிப்புக் கலன்கள், இனிப்புப் பண்டங்கள், அலங்காரச் சுத்திப் பொருட்கள், அழகுசாதனங்கள், கட்டட ஆக்கப்பொருட்கள், கம்பிகள், கம்பிவடங்கள், ஆகியவற்றைத் தயாரித்தலும்.

கின்றது. மேலே தரப்பட்ட பட்டியல் இலங்கயில் ஏற்பட்ட அந்நிய முதலீடு கள் சம்பந்தமான சகல விபரங்களையும் எடுத்துக் காட்டுவதாகவில்லை, ஏனெனில் தற்போதுள்ள தொழிற்தலங்கள் தமது இலாபங்களை திருப்பி முதலீடு செய்த விபரங்கள் அவற்றிற் சேர்க்கப்படவில்லை.

அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் பங்குபற்றுதல்: அபிவிருத்தி நிதிக்கூட்டுத் தாபனத்தின் இயக்கங்கள் தனிப்பட்டோரின் கைத்தொழிற் துறையில் ஏற்பட்ட அதிகரித்த தொழிற்பாடுகளை அறிவிக்கும் வேறொரு குறிகாட்டியாக விளங்குகின் றன. இக்கூட்டுத்தாபனம் 1956ம் ஆண்டில் தொழிற்பட ஆரம்பித்தது. 1961ம் ஆண்டு மார்கழிமாத முடிவுவரை வெவ்வேறு வகைகளில் அபிவிருத்தித் திட்டங் களில் இக்கூட்டுத்தாபனம் பங்கு பற்றி மொத்தம் 247 இலட்சம் ரூபாய்களை வழங்கியது. அநேகமாக இத்தொகை முழுவதும் கைத்தொழில்களிலேயே முதலீடு செய்யப்பட்டது. தனிப்பட்டோர் துறையின் முதலீட்டக்காரர்கள் பங்குபற்றும் அளவிற்குச் சமமான அளவிலேயே இக்கூட்டுத்தாபனம் பொதுவாகப் பங்குபற் றுகின்றது. ஆகையால் இக்கூட்டுத்தாபனத்தோடு சம்பந்தப்பட்ட மொத்த முத லீடு ஏறக்குறைய 494 இலட்சம் ரூபாய்கள் என மதிப்பிடலாம்.

இலங்கையின் கைத்தொழில் அடிப்படை பலமடைந்தும் விருத்தியடைந்தும் உள்ளது என்பதற்கு மேற் கூறிய சான்றுகள் காணப்பட்டன எனினும் கிடைக் கும் சகல வளங்களைக் கவனமாகவும் முறையாகவும் பயன்படுத்துவதன் மூலமாக கைத்தொழில் வளர்ச்சியின் பொதுத்தரமான விகிதத்தைத் அதிகரிக்க வேண் டும் என்பது உணரத்தக்கது. குறைவான வருமானங்கள், வளர்ந்து கொண்டு செல்லும் வேலையில்லாத் திண்டாட்டம், வெளிநாட்டுக் கொடுப்பனவுகளில் உள்ள தொடர்ச்சியான அமுக்கங்கள் ஆகியன போன்ற பிரச்சனைகள் காணப்படுகின் றமையினல் மேற்கூறிய கைத்தொழில் வளர்ச்சி விகிதத்தின் அதிகரிப்பு குறிப் பிடும்படியாகத் தேவைப்படுகின்றது.

நெருங்கிய பிரதேசக் கூட்டுறவு: கைத்தொழில் அபிவிருத்திப் போக்கை துரி தப்படுத்திக் கொள்ளக்கூடியதும், இலங்கை ஏனைய ஆசிய நாடுகளுடன் மேற் கொள்ள முயற்சிப்பதுமான ஒரு வழிவகை, இப்பிரதேசத்தில் உள்ள நாடுகளி டையே நெருங்கிய பொருளாதாரக் கூட்டுறவை வளர்த்துக்கொள்வதேயாகும். வர்த்தகம், கைத்தொழில், விவசாயம், போக்குவரத்து, செய்தி அறிவிப்பு ஆகிய வெவ்வேறு துறைகளில் பிரதேசக்கூட்டுறவை விருத்தி செய்வதற்கு ஒரு ஆசிய பொருளாதாரக் கூட்டுறவுத்தாபனத்தை நிறுவுவதற்கு இலங்கை அரசாங்கம் கொள்கையளவிற் சம்மதித்துள்ளது.

சர்வதேச அபிவ்ருத்திச் சங்கம்: 1961ம் ஆண்டு ஆனியில் சர்வதேச அபிவிருத் திச் சங்கத்தில் இலங்கை அங்கத்துவம் பெற்றதன் விளைவாகவும் இலங்கையின் கைத்தொழில் அபிவிருத்தியை மேலும் விருத்தியடையச்செய்யலாம். பொருளா தார வளர்ச்சியடையாத நாடுகளில் அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவ தற்கு கூடுதலான பிறநாட்டு நிதியீட்டத்தையும், தொழில்நுட்ப உதவியையும் வழிச்செலுத்துவதற்குத் துணைபுரிவதற்காக சர்வதேச அபிவிருத்திச்சங்கம், சர்வ தேசபுனருத்தாரண அபிவிருத்தி வங்கியின் இணைப்பாகத்தாபிக்கப்பட்டது. சம்பி ரதாயமான முறைகளைக்கொண்ட உதவியின் நியமங்களிலும் பார்க்கக் கூடிய இசைவைக் கொண்டதாகவும், சென்மதி நிலுவையைக் குறைந்த முறையில் பாதிப் பதாகவும் உள்ள நியமங்களுக்குட்பட்ட மேற்கூறிய உதவியை அளிப்பதற்கு இச் சங்கம் தாபிக்கப்பட்டது. இலங்கைக்காக விதிக்கப்பட்ட ஆரம்ப ஒப்பப்பணம் 30.3 இலட்சம் டொலர்களாகும்.